# வரிகள்

வந்தவுடன் மறைந்து போகும்
பளிச்சிடும் மின்னல் கீற்றுகளாய்
கவிதை வரிகள்;

கொட்டும் மழையை விட்டு, இலை நுனியில்
சொட்டும் இறுதித் துளிகளாய்
கவிதை வரிகள்;

வருவேன் என்று சொல்லாமலேயே
வந்து போன வசந்தங்களாய்
கவிதை வரிகள்;

குஞ்சாய்ப் பொரிக்கும் என அடைகாத்து
ஜீவனற்றுப் போன கூமுட்டைகளாய்
கவிதை வரிகள்;

திசையற்றுச் சிதறிய சிந்தனை ஓட்டத்தில்
பதிந்த காலடிச் சுவடுகளாய்
கவிதை வரிகள்;

முறுக்கிப் பிழியும் முட்டுவேக வாழ்வில்
அழிந்து போன கோலங்களாய்
கவிதை வரிகள்;

மின்னல் வெட்டட்டும் முளைத்தெழுவோம்
என மண்ணுக்குள் மறைந்திருக்கும் காளான்களாய்
கவிதை வரிகள்...

அ. சௌ
பெங்களூர்
ஏப்ரல் 2000.